# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


இயேசு, "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று கூறினார். (மத் 28:18-20)



# இறைவேண்டலில் பணிவு அவசியம்

## திருத்தந்தை பிரான்சிஸ்

வத்திக்கான்: இறைவேண்டலின் பல்வேறு பண்புகளை விளக்கிக்கூறும் மறைக்கல்வி உரைகளை, ஒவ்வொரு புதனன்றும் வழங்கிவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மே 26, கடந்த புதனன்று, இறைவேண்டலுக்குத் தேவையான பணிவைக்குறித்து டுவிட்டர் செய்தி-யொன்றை வெளியிட்டுள்ளார்.

"நாம் இறைவேண்டல் செய்யும் வேளையில், பணிவுடன் இருப்பது அவசியம். அவ்வாறு செபிக்கும்போது, நமது சொற்கள், கடவுளால் நிராகரிக்கப்படும் பயனற்ற சொற்களாக இல்லாமல், உண்மையிலேயே இறைவேண்டல்களாக இருக்கும்" என்று திருத் தந்தையின் டுவிட்டர் பதிவில் இடம்பெற்றிருந்தன.

மேலும், மே 23, கடந்த ஞாயிறன்று தூய ஆவியாரின் வருகைப் பெருவிழா சிறப்பிக்கப்பட்டதை நினைவுறுத்தும் வண்ணம், இப்புதனன்று, தூய ஆவியாரைக் குறித்து தன் 2வது டுவிட்டர் செய்தியை வெளியிட்டார் திருத்தந்தை.

"கடவுளின் கொடையாக விளங்கும் தூய ஆவியார், நாம் சுதந்திரம் அடைந்த மனிதர்களாக வாழ உதவி செய்கிறார். அன்பு செய்வதை அறிந்த மக்களாக, வாழ்வே, மறைப்பரப்புப்பணி என்பதை அறிந்த மக்களாக வாழ, தூய ஆவியார் உதவி செய்கிறார்" என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், @pontifex என்ற தன் டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்திருந்தார்.

ஒவ்வொரு நாளும், @pontifex என்ற வலைத்தள முகவரியில், திருத்தந்தை வழங்கிவரும் டுவிட்டர் செய்திகள், இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானியம், போர்த்துகீசியம், ஜெர்மன்,



*மறைக்கல்வி உரை வேளையில் திருப்பயணியுடன் இணைந்து செபிக்கும் திருத்தந்தை*

போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன.

மேலும், இறைவேண்டல் குறித்த தமது மறைக்கல்வித் தொடரில் இன்று, நம் இறைவேண்டல்கள் இறைவனால் செவிமடுக்கப்படவில்லை எனத் தோன்றும் நேரங்கள் குறித்து சிந்திக்கவும அழைத்தார். பலவேளைகளில் நாம் ஏமாற்றமடைந்து, இறைவன் நம் விண்ணப்பங்களுக்கு செவிமடுப்பதில்லை என்ற எண்ணத்துடன், நாம் இறைவேண்டல் செய்வதைக்கூட நிறுத்திவிடும் வாய்ப்புகளும் உண்டு. ஆனால், இறைவேண்டல் வழியாக வானகத் தந்தையிடம் பல விடயங்களைக் கேட்க கற்றுத்தந்த இறைவேண்டலின் ஆசிரியராம் இயேசு, எல்லாவற்றிற்கும் மேலாக, இறைவிருப்பம் நிறைவேற செபிக்கச் சொல்லித் தந்திருக்கிறார்.

முதிர்ச்சியுடைய நம்பிக்கை என்பது, இறைபராமரிப்பிலும், நம் வாழ்வுக்கும் உலகுக்குமான இறைத்திட்டத்திலும் முழு நம்பிக்கையுடையது. இருப்பினும், நம் விண்ணப்பங்கள் இறைவனால் செவிமடுக்கப் படவில்லை என நமக்குத தோன்றும் நேரங்களில், நாம் ஆழமான ஏமாற்றத்தைச் சந்திக்கிறோம். கடவுள் நம் துயர்களைப் புரிந்து கொள்கிறார், ஆனால், எப்போதும் உடனே, நம் விருப்பங்களை அவர் நிறைவேற்றி வைப்பதில்லை என்பதை, இயேசுவே தன் வாழ்வு நடவடிக்கை வழியாக நமக்குக் காட்டுகிறார். கெத்சமெனி தோட்டத்தில் இயேசு இறைவேண்டல் ஒன்றை முன்வைக்க, அது இறைவனால் செவிமடுக்கப்படவில்லை என்பதுபோல் தோன்றினாலும், அவர் இறைவிருப்பத்தின் மீது வைத்திருந்த முழு நம்பிக்கை, நம் மீட்புக்கும், உயிர்ப்பின் மகிமைக்கும் இட்டுச்சென்றது. தீமை ஒருபோதும் இறுதி வெற்றியை காண்பதில்லை. நம்பிக்கை ஒளியால் மட்டும் வழிநடத்தப்பட்டு, இருளில் நடக்க வேண்டியச் சூழல்கள் வந்தால், அனைத்-தையும் ஒன்றிணைத்து நம் இறுதி நன்மைக்காக மாற்றும் இறைத்தந்தையின் விருப்பத்தில் நம்பிக்கையிழக்காமல் செயல்படுவோமாக என்று அனைவருக்கும் நமிப்பிகையூட்டினார்.

# மறைக்கல்வி பணியில் சிறந்தோங்க உருவாக்கப் பயிற்சி நடைபெற்றது

**கோலாலம்பூர்**: கடந்தாண்டு தொடங்கப் பட்டு, வளர்ந்து வரும் 'கனிதரும் சீடத்துவம்' எனும் பொதுநிலையினருக்கான பணிக்குழுவின் ஏற்பாட்டில், மாதந்தோறும் நிகழும் தொடர் உருவாக்கப் பயிற்சின் வரிசையில், கடந்த மே மாதம் இரு பயிற்சிகள் மறைக்கல்வி எனும் தலைப்பில் இடம்பெற்றன. முதலாம் மற்றும் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்ற இப்பயிற்சியை, சுங்கை சிப்புட், திருமுழுக்கு யோவான் பங்கின் பங்குத்தந்தையும், பினாங்கு மறைமாவட்டத்-தின் மறைக்கல்வி ஆணையத்தின் தலைவருமான அருள்தந்தை மார்க் மைக்கல் அவர்கள் வழிநடத்தினார். இயங்கலை வழியாக நடைபெற்ற இப்பயிற்சியில் 70 பேர் கலந்து கொண்டனர்.

நமது நம்பிக்கையை வளர்ப்பது, பகிர்வது, பரப்புவது மறைக்கல்வி. மறைக்கல்வி இல்லாவிட்டால் நமது திரு அவை இந்த அளவுக்கு வளர்ந்திருக்காது, பரவியிருக் காது, உயர்ந்திருக்காது. நமதாண்டவர் விட்டுச் சென்ற நற்செய்தியை அவரது திருத்தூதர்கள் மக்கள் மனதில் விதைத் தனர். இயேசு தொடக்கிய மறைக் கல்வியைத் திருத்தூதர்கள் உலகின் நான்கு திசைக்கும் கொண்டு சென்றனர். அதே பணியைத் திருஅவை இன்றளவும் மேற்கொண்டு வருகிறது என்று தமது முன்னுரையில் அருள்தந்தை தெளிவுப்படுத் தினார்.

**நம்பிக்கை**

இந்த தலையாயப் பணியை இன்று நாம் ஏன், எதற்கு, எவ்வாறு மேற்கொள்வது போன்ற பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்தார் அருட்திரு மார்க் மைக்கல். மறைக்கல்வி என்பது எளிமையானது. அது ஒன்றும் பெரிய கம்பச் சித்திரமல்ல என அவர் விளக்கினார். நமது நம்பிக்கையைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதுதான் மறைக்கல்வி என்றார். அதிகம் படித்திராத திருத்தூதர்கள் இப்பணியைச் செய்த போது நம்மால் செய்ய முடியாதா என



*அருளதந்தை மார்க் மைக்கல்*

வினவினார். திருத்தூதர்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம் என்றால், அவர்கள் தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து, தாங்கள் கண்டதைக் கேட்டதை விசுவசித்து, அச்சமின்றி மனவுறுதியோடு போதித்தனர்.

**கடமை**

மறைக்கல்வி அளிப்பது திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரின் கடமை. "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள் (மத்தேயு 28: 19-20) என்று இயேசு பணித்தார். இந்த அன்பு கட்டளையே மறுக்கலிவியின் பிறப்புக்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டது என்று, மறைக்கல்வியின் வரலாற்றை விளக்கினார்.

# முன்னோடி சமூகப் பணியாளர் டாக்டர் ச.சின்னப்பன் காலமானார்

**கோலாலம்பூர்:** கடந்த 24-05-2021-ம் திகதி நாடறிந்த சமூகச் சேவையாளரும் திருஅவையின் முன்னோடி பொதுநிலை பணியாளருமான டாக்டர் சின்னப்பன் சவரிமுத்து அவர்கள் காலமானார்.

கோலாசிலாங்கூரின் ஒரு பகுதியான மின்யாக் தோட்டத்தில், 1950, ஏப்ரல் 24-ம் தேதி, திரு சவரிமுத்து, திருமதி அமிர்தம் தம்பதியினருக்கு இரட்டைக் குழந்தைகளில் ஒருவராகப் பிறந்தார். இவரும் இவரது சகோதரர் இராயப்பன் அவர்களும் இரட்டைக் குழந்தைகளாவர். தொடக்கக் கல்வியை 1957-ல் தொடங்கிய இவர்கள், மின்யாக் தோட்டத் தமிழ்ப்பள்ளியிலும் பின்னர் சுங்கைத் திங்கி தோட்டத் தமிழ்ப்பள்ளியிலும் முடித்து, இடைநிலைப் படிப்பை கம்போங் குவந்தானிலும் தொடர்ந்து பெஸ்தாரி ஜெயாவிலும் இனிதே முடித்தனர். பள்ளிப் பருவத்திலேயே, 1965 முதல் 1970 வரையில், இளம் கிறிஸ்துவ மாணவர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார் டாக்டர் சின்னப்பன்.

அக்காலக்கட்டத்தில், இவர் பங்கிலும் தோட்டப் புறங்களில் இருந்த சிற்றாலயங்களிலும் மறைக்கல்வி, விவிலிய வகுப்புகள் மற்றும் இளையோர் பயிற்சிகளிலும் ஆர்வமும் ஈடுபாடும் காட்டி வந்தார். அத்தோடு, அருள்தந்தை கரோவ் (Fr Carof) அவர்களின் தூண்டுதலின் பேரில் சமூகச் சேவைகளில் ஈடுபாடு காட்டிய இவர், பெஸ்தாரி ஜெயா



வட்டாரத்தில் பெண்களுக்கான தையல் வகுப்புகள், பாலர் பள்ளிகள், டியூசன் வகுப்புகள் போன்றவற்றை தம் சகோதரரோடும் பிறரோடும் தொடங்கி நடத்தியதில் இவருக்குப் பெரும்பங்குண்டு. 1970-ம் ஆண்டில், அடிப்படை விவசாயம் குறித்து மொன்போர்ட், பத்துத் தீகாவில் படித்த இவர், 1971 முதல் 1972 வரையில் சமூகச் சேவைகள் பற்றிக் கற்கப் பிலிப்பைன்ஸ் சென்றார். 1973-ல், அடிப்படைக் கூட்டுறவு அமைப்புக் குறித்து மலேசியக் கூட்டுறவு கல்லூரியில் படித்தார். பின்னர், கிரடிட் யூனியன் எனும் மக்கள் சேமிப்புத் திட்டத்தை தோட்டப் பாட்டாளிகளைக் கொண்டு தொடங் கினார். தொடர்ந்து, மக்கள் கூட்டுறவு நாணயச் சங்கம், மக்கள் சேவை இயக்கம் போன்றவற்றின் முன்னோடி அமைப்பாளருமாக இவர் திகழ்ந்தார்.

அடுத்து, அருள்தந்தை கரோவ் அவர்களின் தலைமையில் இரட்டையர்களான திரு சின்னப்பன் மற்றும் திரு இராயப்பன் இருவருக்கும் 08-06-1974-ல் ஒரே தருணத்தில் திருமணம் நடைபெற்றது. டாக்டர் சின்னப்பன் தமிழ்ப்பள்ளி ஆசிரியரான திருமதி பாப்பாத்தியம்மாள் அழகுதுறை என்பவரை தம் துணைவியாகக் கொண்டார்.

தொடர்ந்து, 1975 முதல் 1979 வரையில், யுனைடெட் ஆசியன் வங்கியில் சிறுகடன், சிறுதொழில் பிரிவில் பணியாற்றினார். அதன் பின்னர், கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் முழுமனித வளர்ச்சி அலுவலகத்தில் இணைந்து, முழுமனித வளர்ச்சிக்கான பல பயிற்சி பட்டறைகளும் சொற்பொழிவுகளும் அளித்து வந்தார். குறிப்பாக ஏழைகள், பழங்குடி மக்கள், இளைஞர்கள் ஆகியோர் மத்தியில் கிறிஸ்தவ நம்பிக்கை, பொருளாதார மேம்பாடு, கல்வியின் அவசியம் போன்றவற்றில் அதிகக் கவனம் செலுத்தினார் என்பது இவர் விட்டுச் செல்லும் வரலாற்றில் ஒரு பகுதியாகும். இவரது சிந்தனை இயேசு கிறிஸ்துவின் புரட்சிகரமான விடுதலைப் போராட்டத்தின் சிந்தனையாக இருந்தது என்பது வெள்ளிடைமலை.

எளியக் குடும்பத்தில் பிறந்த இவர், அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து, மனித உரிமை மற்றும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பல போராட்டங்களில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சமூக மேம்பாட்டுக்கான இவரது பங்களிப்பு காலத்தால் அழியாது.

இவருக்கு தென்னிந்தியாவில் அலுவலகம் கொண்ட நெதர்லாந்து MASS MEDIA GOSPEL MISSION 2004-ஆம் ஆண்டு தத்துவயியலில் டாக்டர் பட்டம் வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. .

தமது துணைவியாரோடு, இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை விட்டுப் பிரிந்துள்ள இவர், வான்வீட்டில், நிலைவாழ்வில் என்றும் மகிழந்திருக்க இறைவன் அருள்புரிய வேண்டுவோம்.

*-ஆர்.கே.சாமி*

# மறைக்கல்வி உருவாக்கப் பயிற்சி

(முதல் பக்கத் தொடர்ச்சி)

**சூழ்நிலை/மனநிலை**

மறைக்கல்வி ஆசிரியர்கள் இயேசுவின் உடன் உழைப்பாளிகள். திருஅவை எனும் இயேசுவின் மந்தையைக் கட்டி எழுப்பு வதில் முக்கியப் பங்காற்றும் பணியாளர்கள். இவர்கள் மறைக்கல்வி அளிக்கும் போது, மற்றவரின் சூழ்நிலையையும் மனநிலையையும் அறிந்து செயல்பட வேண்டும். இது மனித மைய போதனாமுறை எனப்படுகிறது.

யோவான் நற்செய்தி 4-ம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும் 'சமாரிய பெண்' சம்பவத்தைத் தொட்டு, அந்த பெண்ணின் சூழ்நிலையையும் மனநிலையையும் அறிந்து இயேசு உரையாடியதை அருட்தந்தை மார்க் சுட்டிக்காட்டினார். இதனைப் பின்பற்றி சிறுவர்களுக்கும் சரி, பெரியவர்களுக்கும் சரி நமது மறைக்கல்வி அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நம்பிக்கையில் வளர்ச்சி யையும் கிறிஸ்துவ வாழ்வின் முதிர்ச்சியையும் பேணி வளர்ப்பதே மறைக்கல்வியின் பணி என்பது இரத்தினச் சுருக்கமாக இப்பிற்சியில் எடுத்துரைத் தோடு, மறைக்கல்வி ஆசிரியர் ஒவ்வொரு வரும் தூய்மை வாழ்வுக்கு அழைக்கப் பட்டவர் என்பதையும் வலியுறுத்தினார்.

தொடர்ந்து, கத்தோலிக்க மறைக்கல்வி நூலின் உள்ளடக்கமான நான்கு பகுதிகளையும் அருள்தையும் விவரித்த அருள்தந்தை, பங்கேற்பாளரின் கேள்விகளுக்கும் பதில் அளித்து இறுதி ஆசீரோடு சொற்பொழிவை முடித்தார். இரண்டு மணிநேரம் இயங்கலை வழி நடைபெற்ற இப்பயிற்சி குறிப்பாக மறைக்கல்வி ஆசாரியர்களுக்கு நல்லதொரு விருந்தாக அமைந்தது.

இறுதியில், இப்பணிக்குழுவின் தலைவர் சகோ. செல்வராஜூ மதலமுத்து அவர்களின் நன்றியுரையோடு இப்பயிற்சி ஒரு முடிவை எய்தியது. அடுத்தப் பயிற்சியை ஜூன் மாதம் முதல் ஞாயிறன்று, பினாங்கு மறைமாவட்டத்தின் அருள்தந்தை ரோபர்ட் டேனியல் அவர்கள் 'திருவிவிலியம்' எனும் தலைப்பில் வழங்கவுள்ளார்.

*- அந்தோணி இன்னாசி*

# தந்தை, மகன், தூய ஆவியார் உறவில் நிலைத்திருப்போம்

இன்று நாம் கொண்டாடும் மூவொரு இறைவன் பெருவிழா நமக்கு ஒரு பெரிய மறை உண்மையாகவும், மனித அறிவாற்றலால் புரிந்துகொள்ள இயலாத துமாக உள்ளது. தொடக்ககாலத்தில் இஸ்ரயேலர் தந்தையாகிய யாவே கடவுளையே அறிந்திருந்தனர். ஆனால் அவர்களின் புரிந்துணர்வு தந்தை, மகன் தூய ஆவியார் என்ற அளவில் இல்லாமல் இருந்தது. மெசியா வந்தார். தந்தையை வெளிப்படுத்தினார். தூய ஆவியாரின் வருகையைப் பற்றி எடுத்துரைத்தார். இன்று நாம் வாழும் இந்தக் காலக்கட்டத்தில் தந்தையும், மகனும், தூய ஆவியாரும் இணைந்த ஒரே கடவுளென, மூவொரு இறைவனைப் பற்றி அறிந்துகொள்ள நமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய முதல் வாசகத்தில் மோசே இஸ்ரயேல் மக்களுக்கு வாழும் கடவுளின் மாட்சியைப் பற்றி எடுத்துரைக்கின்றார். மனித வரலாற்றில் தமக்கென ஒரு இனத்தைத் தேர்ந்துகொண்டு, அந்த இனம் வாழ ஒரு நாட்டையும் அளித்து, எவ்வாறு வாழவேண்டும் என்று வரையறுத்தும் கொடுத்த இறைவனை எங்கேனும் கேட்டதுண்டா என்று மோசே எடுத்துரைக் கின்றார். ஆம். நம் இறைவன் தமக்கென நம்மையும் தேர்ந்துகொண்டார். நமக்காக தம் மகனையும் அனுப்பி இழந்து போன நிலைவாழ்வை நாம் உரிமைகொண்டாட வாய்ப்பும் ஏற்படுத்தித்தந்தார். விண்ணிலும் மண்ணிலும் உள்ள ஒரே கடவுள் அவரே. இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்த அக்காலத்தில் அவர்களைச் சுற்றிலும் உள்ள பல்வேறு இனத்தவரும் அவரவர் தெய்வங்களைக் கொண்டிருந்ததை அவர்கள் அறிந்திருந் தனர். இருந்தபோதும் அவர்களின் அசைக்கமுடியாத இஸ்ராயேல் கடவுளே மாண்புமிக்கவராகத் திகழ்ந்தார்.

புனித பவுல் தூய ஆவியால் இயக்கப் படுபவர்களே, கடவுளின் பிள்ளைகள். எனவே தான் "அப்பா, தந்தாய்" என்று உரிமையோடு தந்தையை அழைக்கின் றோம் என்கிறார். கிறிஸ்து தாம் அர்ப்பணித்த தூய விலைமதிப்பில்லாத இரத்தத்தால் அந்த உரிமைப்பேற்றை நமக்குப் பெற்றுத்தந்தார். இதனால் தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் மூவொரு இறைவன் தரும் முடிவில்லா வாழ்வைப் பெற்றுக்கொள்ளும் பங்காளி களாக மாறியுள்ளோம் என்று கூறுகிறார். இந்த உரிமைப்பேற்றை நாம் அடையவேண்டுமென்றால், கட்டாயமாக அவரின் துன்பத்திலும் பங்குபெற்றாக வேண்டும். அவ்வாறு பங்கு பெற்றால் தான் விண்ணக மாட்சியை அடையும் தகுதியை நாம் பெறமுடியும்.

நற்செய்தியில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்" என்று சொல்வார்,

இங்கே இயேசு முதன்முறையாக மூவொரு இறைகுடும்பத்தை நமக்கு அறிவிக்கிறார். இயேசு நமக்கு திருஅவைக்கு வெளிப்படுத்திய 'மூவொரு இறைவன்' என்பது ஒரு மறைபொருள், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் ஒழிய, அதை முழுமையாகப் புரிந்துகொள்வது என்பது இயலாத காரியம். "யாதொரு வேறுபாடும் இன்றி, மூவருக்கும் ஒரே அன்பு அன்புறவு, ஒரே ஞானம், ஒரே திருவுளம், ஒரே வல்லமை, ஒரே கடவுள் தன்மை இருப்பதால் மூவரும் ஒரே கடவுள்" எனும் உண்மையை நாம் ஏற்கிறோம்.

ஆகவே, மூவொரு இறைவனின் பெருவிழாவைக் கொண்டாடும் இந்த நாளில், அவர்களிடம் இருக்கும் அன்பையும், அவர்கள் நம்மீது செலுத்தும் அன்பினையும் உணர்ந்துகொள்வோம், அது மட்டுமல்லாமல், இந்த நாளில் அவர் நமக்கு விடுக்கின்ற நற்செய்தி அறிவிப்புப் பணியினை சிறப்புடன் செய்வோம். அதன்வழியாக இறையருளை நிறைவாய் பெறுவோம்.

மூவொரு இறைவன் திருவிழா திரு அவையில் மிகவும் முக்கியமானது. இந்தக் கொண்டாட்டம் 1334-ம் ஆண்டு திருத்தந்தை 22-ம் யோவானால் தொடங் கப்பட்டது என்பது வரலாறு.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**தூய ஆவியார் பெருவிழா**
இச: 4: 32-34, 39-40
திபா: 33: 4-5. 6,9. 18-19. 20,22
உரோ 8: 14-17
மத் : 28: 16-20
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : மூவொரு கடவுள் பெருவிழாவுக்குரியது**